# புனித சவேரியார் பிள்ளைத்தமிழ் வெளிப்படுத்தும் விழுமியங்கள்

***தே. சகாயராணி***
முனைவர் பட்ட ஆய்வாளர், விவேகானந்தா கல்லூரி
அகஸ்தீஸ்வரம், கன்னியாகுமரி மாவட்டம்

***முனைவர் சு. ஜெயகுமாரி***
நெறியாளர், தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்
விவேகானந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம்
கன்னியாகுமரி மாவட்டம்

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July.6411

## முகவுரை

"நற்செய்தியை அறிவிக்கவும், நல்வாழ்வைப் பலப்படுத்தவும் நலம் தரும் செய்தியை உரைக்கவும், விடுதலையைப் பறைசாற்றவும், சீயோனை நோக்கி, "உன் கடவுள் அரசாளுகின்றார்" என்று கூறவும் வருவோரின் பாதங்கள் மலைகள்மேல் எத்துணை அழகாய் இருக்கின்றன!" (எசாயா 52:7) என்ற இறைவார்த்தைக்குச் சான்றாய் வாழ்ந்தவர் புனித சவேரியார். அவர் கத்தோலிக்கத் திருச்சபையை இந்தியாவில் நிறுவி இயேசுவின் நற்செய்தியை இந்திய மக்களுக்கு அறிவிக்க வேண்டுமென்ற இறைக் கட்டளையை நிறைவேற்ற தேர்வு செய்யப்பட்டார்.

**வேதம் என்பது விவிலிய நூலின்**
**வித்தகப் பேருரைகள்**
**விளங்கச் சொல்வதும் விரியக் காண்பதும்**
**வேண்டுமிந் நாளிலெனக்**
**கோதில் ஞானக் கொழுந்தாய் ஒருவன்**
**குமரி வந்துற்றான் (காப்புப் பருவம் 1-10)**

என்று பிள்ளைத்தமிழ் ஆசிரியர் தமிழ்க்குழவி, சவேரியாரின் இந்திய வருகையின் நோக்கத்தைக் காப்புப் பருவத்தில் சுட்டிக்காட்டுகிறார்.

இயேசு அவர்களை நோக்கி, "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற்கு 16:15) என்று சீடர்களுக்கு அழைப்பு விடுத்தார். அதுபோல்

**தந்தைபாப் பரச ரன்று**
**தனயர்ச வேரி யாரை**
**மைந்தநீ செல்க என்ப**
**மாறிலா இளவல் அன்புச்**
**சிந்தையால் உடன்பட் டன்றே**
**லிஸ்பன் துறைமு கத்தில்**

**சந்தியா கப்பல் ஏற**
**சார்பென இறையைக் கொண்டார்!**
**(புனித சவேரியார் பிள்ளைத்தமிழ்**
**வாழ்வோவியம்-5)**

ஆம்! சவேரியாரின் பிறந்த நாளான 1541, ஏப்ரல் 7 ஆம் நாள் சாந்தியாகோ கப்பலில் புறப்பட்டு 1542, மே 5 ஆம் நாள் இந்தியாவில் கோவா துறைமுகத்தை வந்தடைந்தார். இந்தியாவில் குறிப்பாகத் தென்னகத்தில் நற்செய்திப் பணியோடு அவர் ஆற்றிய சமூகப்பணி இறைவனுக்கு உகந்ததாய் அமைந்தது.

## பிறப்பும் இளமையும்

ஸ்பெயின் நாட்டில் நவார் மாவட்டத்தில் யுவான் தெ யாசு, டோனா மரியாள் தம்பதியினருக்கு 1506, ஏப்ரல் 7 ஆம் நாள் ஐந்தாவது மகவையாய் மண்ணில் அவதரித்தார். அவரது இயற்பெயர் பிரான்சிஸ்கோ என்பதாகும்.

**"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை"**
**(குறள் - 400)**

என்பதை உணர்ந்த சவேரியாரின் தாய் அவருக்கு முதல் ஆசானாய்த் திகழ்ந்தார். எனவே, பள்ளி செல்லும் முன்பே தாய்மொழியாகிய "பாஸ்கு" மொழியில் பேசவும் எழுதவும் தேர்ச்சிப் பெற்றார். அவருடைய பங்குத்தந்தை இலத்தீன் மொழியைக் கற்றுக் கொடுத்து முதல் திருவிருந்து மற்றும் உறுதிப் பூசுதலுக்குத் தயார் செய்தார். தொடக்கக் கல்வியைச் சாங்குவேசாவில் பயின்றார்.

ஒன்பது வயதில் தந்தையை இழந்தாலும் கிளாரம்மாள் மடத்தின் தாயாரான மூத்த சகோதரி மகதலேனா அவர்களின் விருப்பத்தினால் பாரீஸ் பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்றார். இதை,

**எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகுமென**
**ஏட்டுக்கல்வி பலபயின்றாய்**
**இசைவாய்ப் பெற்றோர் இனிது மகிழ**
**ஏற்றம் பெற்று மிக உயர்ந்தாய்**
**கண்ணின் மணியாய் வளர்த்த தந்தை**
**கால மானார், இருந்தாலும்**
**கலங்கா துன்னை வளர்த்த தாய்க்குக்**
**கைமா றென்ன நான்செய்வேன்?**
**பண்ணும் பாடலும் பலவித் தகமும்**
**பாடம் உனக்கு நனிதேர்ந்தாய்**
**பாரீஸ் சென்று பல்கலைக் கழகப்**
**பட்டமும் பெற்று உளம் மகிழ்ந்தாய்!**
**(செங்கீரைப்பருவம் 2.3)**

என்று கவிஞர் இனிய சொற்களில் இசை வாய் கூறியுள்ளார்.

**"மெய்யியல் இறையியல் மேனிலைக் கல்வி**
**மிளிரத் தேர்ந்து நெஞ்சுவந்தாய்"**
**(செங்கீரைப் பருவம் 2-4)**

என்று ஆசிரியர் பாடுவதிலிருந்து மெய்யியல் மற்றும் இறையியல் கல்வியும் நன்கு கற்றுத் தேர்ந்தார் என்பதை அறிய முடிகிறது. தொடர்ந்து 1530, மார்ச் 15-ல் மெய்யியலில் சவேரியாரும் அவருடைய தோழர் பீட்டர் பேபரும் முதுகலைப் பட்டம் பெற்றனர். சவேரியார் பாரீஸ் பல்கலைக்கழகத்திலேயே பேராசிரியராக வேண்டும் என்ற கனவில் திளைத்திருந்தார். அப்போது இனிகோ தெலொயோலா இஞ்ஞாசியார் என்ற 39 வயதைத் தாண்டிய ஞான முதிர்ச்சிப் பெற்ற ஒருவர் சவேரியாரின் அறைக்கு வந்தார். "நாம் ஒன்ற நினைக்க தெய்வம் ஒன்று. நினைக்கும்" என்ற மூத்தோர் மொழிக்கிணங்க இஞ்ஞாசியாரின் வருகை சவேரியார் வாழ்வில் ஒரு மைல் கல்லாய் அமைந்தது.

**"அந்நாள் இயேசு சபையின் தலைவர்**
**அறிவின் நிறைஞர் இஞ்ஞாசி**
**ஆன்மச் சுடரை அகவிளக் கேற்றி**
**அருள்பொலி வுற்ற ஒருஞானி"**
**(செங்கீரைப்பருவம் 2.8)**

என்று குறிப்பிடப்படும் இஞ்ஞாசியார் ஆடம்பர வாழ்வில் ஆனந்தம் கண்ட சவேரியாரிடம்

"மனிதர் உலகம் முழுவதையும் ஆதாயமாக்கிக் கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன? அவர்தம் வாழ்வுக்கு ஈடாக எதைக் கொடுப்பார்?"

**(மத்தேயு 16:26)**

என்ற இறைவார்த்தையைக் கூறிக் கொண்டே இருந்தார். இதனால் சவேரியாரின் உள்ளத்தில் ஏற்பட்ட தாக்கம் அவரைச் சிந்திக்க வைத்து, துறவறத்தை மேற்கொள்ள வைத்தது. அதனாலேயே இன்று வணக்கத்துக்குரியவராகி புனித நிலையடைந்து விண்ணக வாழ்வில் இன்பம் காண்கிறார். இதையே நூலாசியர்,

**"அகிலம் முழுவதும் சொந்தம் ஆயினும்**
**ஆத்து மத்தை இழப்பதுவோ**
**அன்று மொழிந்த விவிலிய உரையின்**
**ஆழம் காண முற்பட்டாய்!**
**இகமும் பரமும் ஆளும் இறைவன்**
**எண்ண மறிந்த தாரிங்கு?**
**இயேசு துய்த்த பாடு யாவும்**
**என்ன முறையில் வைப்பதுவோ?**
**சுகமும் துக்கமும் தோய்ந்த வாழ்வில்**
**துயருறும் மக்களுக் காறுதலாய்**
**தோள்கொடுத் துதவ எண்ணினைபோலும்**
**துறவற வாழ்க்கை மேற்கொண்டாய்!**

**(செங்கீரைப் பருவம் 2.7)**

இவ்வாறு சவேரியாரின் இளமைப்பருவத்திலேயே இறையாட்சியின் விழுமியங்கள் அடிநாதமாய் விதைக்கப்பட்டது.

### சவேரியாரின் குமரி வருகை

கோவாவிலிருந்து மணப்பாடு வந்த சவேரியார் அந்த மக்களின் ஆன்மீக வாழ்விற்கும், சமுதாய வாழ்விற்கும் ஊன்றுகோலாய் நின்றார். பின்பு குமரி வந்தார். இதை

**"தலைவன் என்றும் எவருமில்லை**
**தாழ்ந்தவன் என்றும் எவருமில்லை**
**சமத்துவம் காக்கும் மனம் வேண்டும்**
**சத்தியம் பிறழக் கூடாது!**
**நலமாய் இந்தக் கொள்கையுடன்**
**நாடி குமரி வந்தாய்நீ!'**

**(தாலப்பருவம் 3.5)**

குமரி வந்த சவேரியர்,

**உலக மீட்பர் இயேசுபிரான்**
**உரைத்த வேத மொழிகளிலே**
**உயர்ந்தோர் தாழ்ந்தோர் பேதமில்லை**
**ஒப்புர வொழுகல் அறமாகும்!**

**(தாலப்பருவம் 3.5)**

என்ற சிந்தையுடன் தனது பணிவாழ்வைத் தொடர்ந்தார் என்று ஆசிரியர் தாலப்பருவத்தில் பதிவு செய்கிறார்.

### குமரியின் சமூக நிலை

திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் கீழிருந்த குமரி மாவட்ட மக்களின்மேல் பார்ப்பனர்களின் மனுதர்ம விதிகள் திணிக்கப்பட்டு அடிமைகளாக நடத்தப்பட்டார்கள். உழைக்கும் வர்க்கம் கீழானவர்களாகக் கருதப்பட்டார்கள் பனையேறும் தொழில் செய்யும் மக்கள் சாணார் என்று அழைக்கப்பட்டு ஒதுக்கி வைக்கப்பட்டனர்.

**"உமிகள் போனது பதராக**
**உழைக்கும் வர்க்கம் சமுதாய**
**உணர்வே அற்றுக் கிடக்கிறது**
**உரிமை மறுக்கப்படுகிறது"**

**(தாலப்பருவம் - 3.1)**

என்று கவிஞர் தமிழ்க்குழவி சவேரியாரைத் தாலாட்டும் வரிகள் கன்னியாகுமரியின் இழிநிலையைக் காட்டுகிறது.

**"உழைக்கும் மக்கள் உரிமையின்றி**
**ஒவ்வொரு கணமும் வாடுகிறார்**
**உழைப்பை உறிஞ்சும் ஆதிக்க**
**வர்க்கம் இங்கே வாழ்கிறது!**
**கொழுத்தவர் சாதி வரன்முறையைக்**
**கொள்கை யாக்கச் சமுதாயம்**
**குலைந்தது அரசும் உடன்படவே**
**கூக்குரல் அழுகை சேரியெல்லாம்**

**(தாலப்பருவம் 3.2)**

என்று உயர்குடி மக்கள், உழைப்பாளி வர்க்கத்தின் உழைப்பை உறிஞ்சிவிட்டு, ஒதுக்கி வைத்து கொடுமைப்படுத்திய நிலையை ஆசிரியர் தணியா தாகத்துடன் பதிவு செய்கிறார்.

***"பரதவ மக்கள் அனுபவிக்கும்***
***பரிதா பத்திற் களவில்லை***
***படகுகள் மூலம் கடல்கடக்கும்***
***பாடுகள் சுமப்பார்க் குய்வில்லை***
***அரசர் முதலால் அன்றிருந்த***
***ஆளுமை மிக்க சாதியினர்***
***அடிமை என்றே பிறரையெல்லாம்***
***அடக்கி வைத்து வாழ்கின்றார்."***

***(தாலப்பருவம் 3.3)***

என்று ஆழ்கடலின் அலைகளுக்கிடையில் தன்வாழ்வை அடகு வைத்து பிடித்து வந்த மீன்களுக்கு விலையுண்டு, மீனவனுக்கோ மதிப்பில்லை. அரசாளும் அரசனும் ஆதிக்க சாதியினரும் அந்நியராய், அடிமைகளாய் ஆட்டி வைத்த நிலையை அழகுற கவிஞர் எடுத்துரைக்கிறார்.

***சாலையிலே நடப்பதற்கும் உரிமைமறுக் கப்பட்ட***
***சாதியனர் இங்கே உண்டு***
***சாப்பாடா இல்லையில்லை வெறும் கூழ்தான் உணவென்று***
***சாத்திரங்கள் இங்கே உண்டு***
***சேலையிலே மார்பகங்கள் மறைப்பதற்கும் உரிமையிலாச்***
***சிற்றிடையர் இங்கே உண்டு***
***செருப்பணிதல் கூடாது முழங்கால்மேல் தான் துண்டு***
***சித்ரவதை இங்கே உண்டு***
***ஓலையிலே தான் குடிசை, உயரத்திற் களவுண்டு***
***உள்ளத்தில் உறுதி கொண்டு***
***ஓங்கியெழ முற்பட்டால் உடனடியாத் தண்டனைகள்***
***உயிர்பறிக்கும் வகையிலுண்டு"***

***(சாப்பாணிப்பருவம் 4.8)***

என்ற வலிகள் நிறைந்த வரிகள், ஆடுமாடுகள் நடந்து செல்லும் சாலையில் இறைச்சாயலான மனிதனுக்கு உரிமையில்லை. உழுது, விதைத்து, பயிர் செய்தவனுக்குக் கூழ்கூட ஒரு வேளை தான் மானத்தை மறைக்கும் மாராப்பும் மறுக்கப்பட்ட நிலையில், மீறினால் கசையடி, சிறைக்கூடம் என்று குமரி மக்களின் கொடுமைகளின் அவலம் தலைவிரித்தாடிய வரலாற்றுப் பதிவுகளைப் படம் பிடித்துக் காட்டுகிறது. இதனால் பாவ வாழ்விலிருந்து மீட்க வந்த மாபரன் இயேசுவைப் போல் குமரி மக்களை மீட்டெடுத்து மீட்புப் பாதையைக் காட்ட சவேரியார் கன்னியாகுமரி மக்கள் மீது தணியாத தாகம் கொண்டார்.

### சவேரியாரின் சமூகப்பணிகள்

***"என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்?***
***என்று தணியும் இந்த அடிமையின் மோகம்?***
***என்றெம தன்கை விலங்குகள் போகும்?***
***என்றெம தின்னல்கள் தீர்ந்து பொய்யாகும்?***

***(பாரதியாரின் தேசியகீதம்-28)***

என்ற பாரதியின் கேள்விகளுக்கு விடையாய்

***"நோயற்றவர்க்கு அல்ல, நோயுற்றவர்க்கே***
***மருத்துவர் தேவை" (மத். 9:12)***

என்ற விவிலிய வர்த்தைகளுக்கு உயிர்க்கொடுக்கும் விதமாய்ச் சவேரியாரின் பணிகள் அமைந்தன. இதையே

***"தானம் ஒன்றே தவமாதும்***
***தக்கார் வாழ்ந்த கோட்டாறு***
***தாழ்ந்த தேபின் சாதிகளால்***
***சரிந்த தோநல மேன்மைகள்?***
***கானக் குயிலாய் மீட்டெடுக்க***
***காவிய சவேரியார் மகவாக"***

***(முத்தப்பருவம் 5.4)***

என்று கவிஞர் தமிழ்க்குழவி பாடியுள்ளார். கடற்கரை மக்களுக்கும் காவலனாய் இருந்தார் என்பதை

***"தொடர்கதை யாகும் துயரங்கள்***
***தோள்கொடுப் பவரோ எவருமிலை***
***தொட்டால் தீட்டெனும் பிறருக்கோ***
***தொடர்ந்து மீன்அமு துணவளிப்பர்***
***விடையிலா அவர்தம் வாழ்விற்கு***
***விடியல் தரவோ சவேரியார்"***

***(தாலப்பருவம் 5-9)***

என்று பாடியுள்ளார்.

**“எல்லோரும் ஒன்றென்னுங் காலம் வந்ததே பொய்யும்**
**ஏமாற்றுந் தொலைகின்ற காலம் வந்ததே - இனி**
**நல்லோர் பெரிய ரென்னும் காலம் வந்ததே - கெட்ட**
**நயவஞ்ச கக்காரருக்கு நாசம் வந்ததே”**
**(பாரதியின் தேசிய கீதம்)**

என்று சமத்துவம் பாடிய பாரதியின் வழிநின்று

**“ஆண்டான் அடிமை முறையைத் தகர்த்தாய்**
**அனைவரும் சமமென் றுரைத்தாய்நீ**
**அந்நாள் அரசைப் பார்தன் றவர்க்கும்**
**ஆளுமுன் வேதம் பகர்ந்தாய்நீ”**
**(வருகைப்பருவம் 6.10)**

என்ற கூற்றிலிருந்த சவேரியாரும் சமத்துவக் கருத்துகளை மக்களிடம் விதைத்தார் என்பதில் ஐயமில்லை.

**“கருணையும் அன்பும் கனிவொடு பணிவும்**
**கண்களில் தோன்ற வருகின்றாய்**
**கவலைகள் தீர இளைப்பா றுதலைக்**
**காட்சிப் படுத்த வருகின்றாய்**
**குருணையும் கூழும் இல்லா தோர்க்குக்**
**கொடுத்து மகிழ வருகின்றாய்**
**கூன்கள் நிமிர்த்த, குறிக்கோள் யாதெனும்**
**கொள்கைகள் காட்ட வருகின்றாய்”**
**(வருகைப்பருவம் 6.7)**

இதிலிருந்து சவோரியார் அடிமைநிலையிலும் அறியாமை இருளிலும் மூழ்கிக் கிடந்த மக்களைத் தட்டி எழுப்பி விழிப்புணர்வுட்டினார் என்பது வெள்ளிடை மலையாய் விளங்குகிறது.

**கல்விப் பணிகள்**

**“தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத்து ஊறும் அறிவு”**
**(குறள் 396)**

என்ற பொய்யா மொழிப் புலவரின் கூற்றிற்கிணங்க மக்களிடம் அறியாமையை அகற்ற, கல்வி ஒளி யேற்ற வேண்டுமென்பதை உணர்ந்த சவேரியார்,

**“விதியாது எல்லாமே விதித்தவைதான் என்றிங்கு**
**விழிப்புணர்வு தோற்று வித்தாய்**
**வீழ்ந்துடைத் துழைத்தவர்கள் வினையாண்மை பெறுவதற்கு**
**விடியல்போல் கல்வி தந்தாய்”**
**(சப்பாணிப் பருவம் 4.7)**

என்று பாடுவதிலிருந்து குமரி மக்களுக்குக் கல்வி தர காரணமானார் என்பதை அறியலாம்.

நலமாய் கல்வி பெற நயமாய் கட்டிடங்கள் அமைத்து கல்வி நிலையங்கள் உருவாக்கி கல்வி கொடுத்தார் என்பதை

**“கல்விக்கண் திறப்பதனைக் கடமையெனக் கருதிஉயர்**
**கருமங்கள் ஆற்ற லுற்றாய்**
**கல்விநிலை யங்கள்பல கட்டுவித்துச் சிறுவர்கள்**
**கலங்காது பயில வைத்தாய்**
**ஒல்லும்வாய் எல்லாமே உதவுவதாய்த் தீர்மானித்**
**துறங்காமல் பணிகள் செய்தாய்”**
**(சப்பாணிப் பருவம் : 4.4)**

என்ற வரிகள் கண்முன் கொண்டு வருகின்றன.

குமரி மக்கள், தன்மீது சுமத்தப்பட்ட அத்தனைத் துன்பங்களையும் விதிப்பயன் என்று எண்ணியாங்கு வாழ்க்கையில்,

**“விலங்காய் வாழும் மானிடம் யாண்டும்**
**விழித்திட வேண்டும் எனநினைத்தாய்**
**வீழ்தலும் எழுதலும் விதியா லன்று**
**வினைப்பய னாலென விடைகண்டாய்!**
**கலங்கா திருக்க மக்களுக்காகக்**
**கல்விக் கூடம் வேண்டுமென்றாய்**
**கடவுள் மீது பயமும் பக்தியும்**
**கருணையை ஈர்க்கத் தூண்டுமென்றாய்!”**
**(செங்கரைப் பருவம் 2.6)**

கல்வி கொடுத்து கடவுள் பக்தியையும் மக்களில் மலரச் செய்தார் என்பதை இவ்வைர வரிகள் மூலம் அறியலாம். “கல்விப்பணியே கடவுள் பணி” என்பதை அறிந்திருநதார் போலும் அதனால் ஆசிரியர் சவேரியாரை

***"எழுத்தறி வித்தவன் இறைவனென***
***எண்ணுவம், கல்விச் செல்வமொன்றே***
***எழுந்து மனிதனை நிற்கவைத்து***
***எழுச்சி தருமதை மறப்பதுவோ?"***

***(தாலப்பருவம் 3.2)***

என்று கூறுவதிலிருந்து கல்விப்பணியையும் நற்செய்திப் பணியாக ஆற்றி எழுச்சிக் கனலை மூட்டினார்.

**ஆன்மீகப் பணி**

நற்செய்தி பணியாற்ற வந்த சவேரியார் தமது பணிவாழ்வை மேற்கொள்ளும் போது இயேசு தம் சீடருக்குக் கொடுத்த அறிவுரைப் படி

***"பயணத்திற்குக் கைத்தடி தவிர உணவு பை, இடைக்கச்சையில் செப்புக் காசு முதலிய வேறு எதையும் நீங்கள் எடுத்துக் கொண்டு போக வேண்டாம்"***

***(மாற்கு 6:8)***

என்பதை உணர்ந்த சவோரியார் அரண்மனையில் பகட்டான வாழ்க்கை வாழ்ந்தவரானாலும் பணித்தளத்தில் ஏழ்மையைக் கவசமாக்கக் கொண்டு வாழ்ந்தார் என்பதை

***"ஓவா உழைப்பு உண்மையில் நிலைக்க***
***உறவை வளர்த்து நிறைவுற்றாய்***
***ஒவ்வொரு வீட்டிலும் கூழோ சோறோ***
***உண்டு மகிழ்ந்து அறம்வளர்த்தாய்***
***பூவாய் அழகு பொருந்திய முகத்துடன்***
***புனித இங்கென் மகவானாய்***
***புகழ்ப்பா சூடுவன், சவேரி யார்நீ"***

***(சிறுபறைப் பருவம்: 9.5)***

என்று வெளிப்படுத்தியுள்ளார். மேலும் அவருடைய தோற்றத்தைக் குறிப்பிடும் போது,

***"கனிவு, பணிவு, கருணை அன்புநின்***
***கவினாய் நிரம்பின ஓவியம்போல்***
***கையில் குருசு தவமணி மாலை***
***காட்சிக ளாயின"***

***(செங்கீரைப்பருவம்: 2-9)***

என்பதிலிருந்து காட்சிக்கு எளியவராகவும், தெய்வீகத் தன்மை உடையவராவும் இருந்தார் என்பதை அறிய முடிகிறது. ஆன்மீக வாழ்விற்கு முதல்படி பக்தியும் விசுவாசமும் ஆகும். சவேரியார் தனது விசுவாசத்தாலும், ஜெபத்தாலும் பல புதுமைகள் செய்து வந்தார் என்பதை ஆசிரியர் சிறுபறைப் பருவத்தில் பறையடித்து பறைசாற்றியுள்ளார்.

***"திடுமென ஒருநாள் வடுகர் படைகள்***
***திருவாங் கூர்மேல் பகை கொண்டு***
***தீவிர மாக ஏகக் கண்டு***
***திகைத்தார் மன்னர் மார்த்தாண்டர்***
***வடசேரி மேட்டில் நின்று நீயும்***
***வாட்கண் கொண்டு நோக்குகிறாய்***
***வடுகர் படையை வெல்வ தெப்படி***
***வானகத் தந்தையை வேண்டுகிறாய்***
***கடந்தைகள் நச்சு வண்டுகள் எழுந்தன***
***காற்றில் பறந்து பகைவர்களைக்***
***கண்கள் முகமெனக் கொட்டித் தீர்த்தன***
***கலங்கி ஓடினர் பகைவர்களே***
***திடமிஃ தெப்படித் தேர்ந்தனை தெய்வத்***
***திருவருள் பொலிந்தது வேறென்ன"***

***(சிறுபறைப் பருவம்: 9.4)***

என்று சவேரியரின் ஆன்மீக வாழ்வால், இறை நம்பிக்கையால் வடுகர்படையை விரட்டிய செய்தி நம்முடைய விசுவாச வாழ்விற்கும் தூண்டுகோலாய் அமைந்துள்ளது.

ஒரு மனிதனை அறிவாளியாக்குவது கல்வி என்றால் அவனை ஞானமுள்ளவனாக்குவது மறைக்கல்வி. அந்த மறைக்கல்வியைக் கன்னியாகுமரி மக்களுள் விதைத்தவர் சவேரியார் என்பதை,

***"கத்தோ லிக்க மறுமலர்ச் சிக்குக்***
***கட்டியம் கூறியவர்***
***கன்னியா குமரி பகுதியில் கிறித்தவக்***
***கல்வியை ஊன்றியவா***
***வித்தா ரத்தமிழ் தன்னை எளிய***
***விதையெனத் தூவியவா***
***வேதம் என்பது விவிலியம் என்று***
***விளக்கிக் கூறியவா"***

***(சிற்றில் பருவம்: 8-4)***

சிற்றில் பருவத்தில் சிறப்பாகப் பாடியுள்ளார்.

குமரி வந்த சவேரியார் கடற்கரை வழியாக மணியடித்துக் கொண்டே செல்வாராம் அப்போது கூடிவரும் மக்களுக்கு இயேசுவின் நற்செய்தியை அறிவிப்பார். பின்னாளில் அவர்களை ஒரே இடத்தில் கூடச் செய்தவற்கு ஆலயம் எழுப்பினார் என்பது வரலாற்றுச் செய்தி. மணப்பாட்டில் கடற்கரையில் இருக்கும் குகையும் புதுமைக்கிணறும் கோட்டாறு சவேரியார் கோவிலிலிருக்கும் மாதா கோவிலும் இன்றும் சான்றாய் விளங்குகிறது.

**"வேதம் என்பது விவிலிய நூலின்**
**வித்தகப் பேருரைகள்**
**விளங்கச் சொல்வதும் விரியக் காண்பதும்**
**வேண்டுமிந் நாளிலெனக்**
**கோதில் ஞானக் கொழுந்தாய் ஒருவன்**
**குமரி வந்துற்றான்**
**கோட்டாற் றுத்திருப் பதியில் தொழுதிடக்**
**கோவிலைக் கட்டுவித்தான்"**

***(காப்புப் பருவம்: 1:10)***

என்ற பிள்ளைத்தமிழ் காப்புப் பருவப் பாடல் கருத்தாய் நம்முள்ளத்தில் சவேரியாின் ஆன்மீகப் பணியைப் பதிய வைக்கிறது.

## நிறைவுரை

**அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு**

***(குறள் : 80)***

என்ற வள்ளுவரின் குறளையே தன்னுடைய பிள்ளைத்தமிழுக்கு இறைவணக்கப் பாடலாகக் கொண்டு "அன்பே கடவுள்" என்பதை

**"அன்பின் வழியதாய் அருள்கூர்ந் தெம்மை**
**ஆளும் பேரிறையே"**

***(காப்புப் பருவம்: 1.1)***

என்று தொடங்கிய சவேரியார் பிள்ளைத் தமிழ் நூலில் சவேரியார் இறைச்சித்தத்தை நிறைவேற்றவே தனது பணிவாழ்வை அமைத்துக் கொண்டார் என்பதை

**"விண்ணிகர் மேன்மை மண்ணகம் துலங்க**
**விருப்பம் கொண்டீரோ"**

***(காப்புப் பருவம்: 1.1)***

என்று பாடி பரவசப்படுத்துகிறார். சவேரியார் தனது மண்ணக வாழ்வில் இறைபணியைச் சமூகப் பணியோடு இணைத்து செய்தார். இன்றும் விண்ணக வாழ்வில் இறைவனிடம் பரிந்து பேசும் உரிமைப் பெற்று மக்கள் பணி செய்து வாழும் புனிதரைப் போற்றுவோம்! அவரது பணி வாழ்வை நம்மிலும் மலரச் செய்ய முயற்சிப்போம்!

## துணைநூற்பட்டியல்

1. புனித சவேரியார் பிள்ளைத்தமிழ், கவிஞர் தமிழ்க்குழவி, குறளகம்.
2. புனித சவேரியார்,மாம்ப்ரா. சே.ச.
3. கேட்ட வரம் தரும் புனித சவேரியார், சுவாமி சே. ரோ. நற்சீசன்.
4. https://ta.m.wikipedia.org>wiki

## மேற்கோள்

1. திருக்குறள்
2. தென்பாண்டி நாட்டுப் படைப்பாளர்களின் சமூக சிந்தனைகள்.